பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

*07 06 2026 SUNDAY 7 15 PM*

ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாடு அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. பெண் குழந்தைகளின் வாழ்வை பாதுகாக்கும் கவசமாக கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்கான தடுப்பூசி திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. நீட் மறுதேர்வு நடைபெறவுள்ள தேர்வு மையங்களின் நகரங்கள் குறித்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு முகமை கூறியுள்ளது.

4. இந்தியாவுடனான நல்லுறவு சீராக உள்ளதாக நேபாளம் தெரிவித்துள்ளது.

5. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

>>>>><<<<<

நாடு அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 12 ஆண்டுகளாக பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

விண்வெளித் துறையில் படைக்கப்பட்ட சாதனைகளை அவர் பட்டியலிட்டார்.

புத்தொழில் நிறுவனங்களை தொடங்குவதிலும் இந்தியா முன்னணியில் உள்ளதாக அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட இந்த நடவடிக்கைகள் உதவிடும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

*கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்கான தடுப்பூசியினை 14 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகள் செலுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*மத்தியப்பிரதேசத்தின் Vidisha-வில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த தடுப்பூசி இலவசமாக வழங்கப்படுவதை சுட்டிக்காட்டினார்.*

*பெண் குழந்தைகளின் வாழ்வை பாதுகாக்கும் கவசமாக இந்த தடுப்பூசி திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*இந்த தடுப்பூசி பாதுகாப்பானது மட்டுமின்றி, புற்றுநோய் இல்லாத வாழ்விற்கான உத்தரவாதமாகவும் உள்ளது என்று திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*"சினிமாவின் ஆன்மா" என்ற தமது நூலை 24 மொழிகளில் மொழிபெயர்க்க மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உறுதியளித்துள்ளதாக எழுத்தாளர் திரு. சீனு ராமசாமி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதற்காக மத்திய இணையமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.*

*"சிறார் ரசனைக் கல்வி" என்ற மையக் கருத்தோடு தாம் எழுதிய இந்த நூலை, மத்திய இணையமைச்சருக்கு வழங்கியது தொடர்பான புகைப்படங்களையும் திரு. சீனு ராமசாமி வெளியிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த 12 ஆண்டுகளாக நிறைவேற்றிய திட்டங்கள் மூலம் கோடிக்கணக்கானோர் பயனடைந்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.*

*இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், 4 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அனைத்து குடியிருப்புகளுக்கும் மின் இணைப்பு உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும், 80 கோடிக்கும் மேற்பட்டோருக்கு மாதந்தோறும் இலவச உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ், 12 கோடிக்கும் அதிகமாக எண்ணிக்கையில் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலவச சமையல் எரிவாயு இணைப்பு திட்டத்தின் கீழ் 10 கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாகவும் பிஜேபி அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தேசிய தடய அறிவியல் பல்கலைக் கழகம், சர்வதேச அளவில் பெரும் வரவேற்பை பெற்று வருகிறது.

குஜராத் மாநிலம், காந்திநகரில் செயல்பட்டு வரும் இந்த பல்கலைக் கழகம், தடய அறிவியல் தொடர்பாக உலக அளவில் ஒரே பல்கலைக் கழகம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

இந்த பல்கலைக் கழகத்தில் 96 நாடுகளின் பிரதிநிதிகள் பயிற்சி பெற்றுள்ளது, சர்வதேச அளவில் அதற்கான அங்கீகாரத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று அந்த பல்கலைக் கழகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள 13 இடங்களில் இந்த பல்கலைக்கழக வளாகங்கள் செயல்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஆகாஷ்வாணி முக்கியப் பங்கு வகிப்பதாக ஆந்திர மாநில ஆளுநர் திரு. Abdul Nazeer கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 90 ஆண்டுகளாக சிறப்பான சேவையை ஆகாஷ்வாணி வழங்கி வருவதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலனுக்காக ஆகாஷ்வாணி அர்ப்பணிப்போடு பணியாற்றி வருவதாகவும் திரு. Abdul Nazeer கூறியுள்ளார்.

>>>>><<<<<

கடல்சார் பொருளாதாரத்தில் கேரளாவிற்கு பெரிய அளவில் வாய்ப்புகள் உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. V. D. Satheesan கூறியுள்ளார்.

சர்வதேச கடல் தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி எழுதியுள்ள கட்டுரையில் முதலமைச்சர் இதனை தெரிவித்துள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

துறைமுகங்கள் மற்றும் கடல்சார் கட்டமைப்பு, பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் என்றும் திரு. V. D. Satheesan அந்த கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

மேற்குவங்கத்தில் நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு, கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அமைச்சர் திருமதி. Agnimitra Paul கூறியுள்ளார்.

இன்று சிலிகுரியில் பல்வேறு மாவட்டங்களின் உயரதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நகர்ப்புறங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவது ஒழுங்குபடுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தூய்மைப் பணிகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் திருமதி. Agnimitra Pal கூறினார்.

>>>>><<<<<

இளநிலை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் மறுதேர்வுக்கான தேர்வு மையங்களின் நகரங்கள் குறித்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய தேர்வு முகமையின் இணையதளத்தில் மாணவர்கள் தங்களுடைய விண்ணப்ப எண்ணை சமர்ப்பித்து, இதனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று அந்த முகமை சமூகவலைதளத்தில் தெரிவித்துள்ளது.

நாடுமுழுவதும் 551 நகரங்களிலும், வெளிநாடுகளில் 14 நகரங்களிலும் இந்த மறுதேர்வு வரும் 21ஆம் தேதி நடைபெறுகிறது.

>>>>><<<<<

வங்கி முறைகேடு தொடர்பான வழக்கில் சிபிஐ, தில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஆறு இடங்களில் இன்று சோதனை நடத்தியது.

சண்டிகர், பஞ்ச்குலா, தில்லி மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இந்த சோதனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அரசு அதிகாரிகள், வங்கி அதிகாரிகளுடன் இணைந்து 668 கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடுகளில் ஈடுபட்டதாக கூறி தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையில், சிபிஐ இந்த நடவடிக்கை மேற்கொண்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>><<<<<

இந்தியாவுடனான நல்லுறவு சீராக உள்ளதாக நேபாளம் கூறியுள்ளது.

மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Shisir Khanal, செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லுறவை இருநாடுகளும் கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

எரிசக்தி, வர்த்தகம் மற்றும் சுற்றுலா துறைகளில் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த நேபாளம் விரும்புவதாகவும் திரு. Shisir Khanal தெரிவித்தார்.

>>>>><<<<<

Peru-வில் அதிபர் பதவிக்கான தேர்தல் இன்று நடைபெற்றது.

இந்த தேர்தலில் திருமதி. Keiko Fujimori, திரு. Roberto Sanchez ஆகியோர் களத்தில் உள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற தேர்தலில் 33 பேரை பின்தள்ளி, இவர்கள் இருவரும் தற்போது களத்தில் உள்ளனர்.

இருப்பினும் அந்த தேர்தலில் 20 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்குகள் இவர்களுக்கு கிடைக்காததன் காரணமாக தற்போது மீண்டும் தேர்தல் நடைபெற்றது.

>>>>><<<<<

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

நியூ சண்டிகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் ஆப்கானிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 113 ரன் எடுத்துள்ளது.

Rahmat Shah 43 ரன்னுடன் களத்தில் உள்ளார்.

Manav Suthar அபாரமாக பந்துவீசி 3 விக்கெட்டுகளை வீழத்தினார்.

முன்னதாக, 3 விக்கெட் இழப்புக்கு 368 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய இந்தியா, 8 விக்கெட் இழப்புக்கு 564 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

ஷுப்மன் கில் 126 ரன்னுக்கும், கே.எல். ராகுல் 100 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர்.

வாஷிங்டன் சுந்தர் 52 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

>>>>><<<<<

*தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில் கோப்பையை வென்ற இந்திய அணியினருக்கு, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.*

*>>>>><<<<<*

*அஹமதாபாதில் நடைபெற்று வரும், உலக யோகாசன சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Ritu Mondal இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றார்.*

*>>>>><<<<<*

*Latvia சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Patri வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*>>>>><<<<<*

*Ulaanbaatar ஓப்பன் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், 4 வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*>>>>><<<<<*

*சீன தைபே ஓப்பன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கம் வென்றது.*

*மகளிர் நீளம் தாண்டுதலில் Shaili Singh தங்கப்பதக்கத்தையும், ஆடவர் 110 மீட்டர் தடை ஓட்டப்பிரிவில் Tejas Shirse வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.*

*ஆடவர் 200 மீட்டர் ஓட்டத்தில் Animesh-க்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.*

*>>>>><<<<<*

*23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய படகு சாம்பியன் போட்டியில், இந்தியா 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

*>>>>><<<<<*

*ஜப்பானில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் வைசாலி பட்டம் வென்றார்.*

*>>>>>END<<<<<*